விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், நவல்பட்டு கிராமம், புல எண் 310/1-இல் உள்ள 343.38.0 ஹெக்டேர் பரப்பளவு நிலம், கிராம கணக்குகளில் தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், காவலர் வீட்டு வசதி வாரியம், சமத்துவபுரம், காவலர் பயிற்சிப் பள்ளி போன்றவற்றிற்கு தடையாணையிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், பர்மா அகதிகளுக்கு நில ஒப்படை வழங்க ஏதும் இல்லை.

3—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6548—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஈச்சனேரி, கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், கழவன்குளம் குரூப் ஈச்சனேரி கிராமத்தில் தகுதியான நத்தம் காலிமனை இடம் ஏதுமில்லை என்பதால், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2012 மே 11]

4—

பட்டா வழங்குதல்

வினா எண் 7189—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, அண்ணாநகர், ஜீவாநகர், சேர்வார் ஊரணி, வைரவபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுக்குச் சொந்தமான புறம்போக்கில், 5 ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு பட்டா வழங்கும் தமிழக அரசின் ஒருமுறை சிறப்புத் திட்டம் 30-9-2011 உடன் முடிந்து விட்டது. மேற்குறிப்பிட்ட இடங்கள், வட்டத் தலைமையிடத்திலிருந்து எட்டு கிலோ மீட்டருக்குள் வருவதால் பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

5—

பட்டா வழங்குதல்

வினா எண் 7971—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வைகை வடகரை ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மடப்புரம் குரூப், வைகை வடகரை கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் இன மக்களுக்கு, வைகை வடகரை கிராமத்தில் வழங்கத் தகுதியான நத்தம் மனையிடம் ஏதும் இல்லை என்பதால் வீட்டுமனைப் பட்டா *வழங்க மார்க்கமில்லை.*

6—

இலவசப் பட்டா

வினா எண் 8101—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் ஒன்றியம், எடையப்பட்டி காலனிக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமம், புல எண் 170/9-இல் வசிக்கும் 9 தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடும்பங்கள், 11 மிகவும் பிற்பட்டோர் இன குடும்பங்கள் ஆக மொத்தம் 20 குடும்பங்களுக்கு, ஒப்படை விதிமுறைகளை அனுசரித்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7—

பட்டா

வினா எண் 8233—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2012 மே 11]

ஈரோடு மாவட்டம், சவண்டப்பூர் கிராமம், ஆண்டி காடு பகுதியில் உள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

*ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், சவுண்டப்பூர் கிராமம், புல எண் 44/1-இல் உள்ள 3.44.5 ஹெக்டேர் நிலம், அருள்மிகு செல்லியாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமானது. இந்நிலம், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி நிலத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், இதர இனத்தவர்களுக்கும் வீட்டுமனை ஒப்படை *வழங்க, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நல அலுவலர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

8—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 8588—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கொண்டாரெட்டி என்ற வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்து பழங்குடியினர் வகுப்பிற்கு வகுப்புச் சான்றிதழ் வழங்குவது தொடர்பான அறிவுரைகள் அவ்வப்போது அனுப்பப்பட்டு வருகின்றன. அதேபோல், வருவாய் நிருவாக ஆணையர் கடித எண் வ.நி.5(3)/2958/11, சுற்றிக்கை எண் 01/2011, நாள் 21-1-2011 வாயிலாக பழங்குடியினர் வகுப்பிற்கு உரிய நேரத்தில் வகுப்புச் சான்றிதழ் வழங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மே 11

9—

இலவச வீட்டுமனை

வினா எண் 8755—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி தொகுதி, வீராச்சிபாளையம் அக்ரஹாரம், அருந்ததியர் தெருவிற்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அக்ரஹாரம் கிராமம், அருந்ததியர் தெரு, புல. எண் 153/1-இல் உள்ள 0.98.0 ஹெக்டேர் நிலப்பரப்பளவு நிலம், அருந்ததியர் நத்தம் என கிராமக் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. மேற்படி நில அளவையில் வசிக்கும் 131 அருந்ததியர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர மேற்படி கிராமத்தில், நத்தம் நிலப்பகுதியில் வீடு கட்டி அனுபவம் செய்யும் நபர்களிடமிருந்து மனுக்கள் அளிக்கப்படுமேயாயின் அவற்றின்மீது, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சங்ககிரி வட்டாட்சியர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

10—

பட்டா

வினா எண் 9952—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம், அம்மாபட்டி க.ச.315-இல் மந்தை புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 மே 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம், அம்மாபட்டி க.ச.315, ராஜகோபாலன் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனியார் பூமியாகும். எனவே, மேற்படி பூமியில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

11—

சமூகப் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 12398—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விரிவான சமூகப் பாதுக்காப்புத் திட்டம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்க்கையில் அனைத்து முக்கிய நிலைகளிலும் துணை நிற்கும் வகையில், ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்துவதன் அவசியம் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தப் போவதாக சட்டமன்றத்தில் 10-9-2011 அன்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று அழைக்கப்படும் என்றும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி அரசு, அரசாணை (நிலை) எண் 265, வருவாய் [நீசீ.1(2)] துறை, நாள் 10-9-2011-ன்படி "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்கள் உள்ளன:

[2012 மே 11

1. கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் சம உரிமை வழங்கும் வகையில், அவர்கள் விவசாயத் தொழில் செய்பவராக இருந்தால், அவர்கள் இருவருக்கும் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும்.

2. விபத்து நிவாரணத்தினைப் பொறுத்தவரை, உதவித் தொகை பெறுவதற்கு எந்தக் கால அளவும் நிர்ணயிக்கப்படவில்லை. இதனால், ••விபத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பத்தினரும் பயனடையலாம். முந்தைய திட்டத்தில் உள்ளது போல், •விபத்து பற்றிய அறிக்கை காவல் துறை மற்றும் தன் வட்டாட்சியர் (சபாதி) ஆகியோருக்கும் அனுப்ப வேண்டியதில்லை.

3. விபத்து நிவாரணத்தின்கீழ், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட உறுப்பினருக்கும் ரூ.50,000/- வழங்கப்படுகிறது. இது முந்தைய திட்டத்தில் கிடையாது.

4. இத்திட்டத்தின் உறுப்பினர் இறந்தால், ஈமச்சடங்கிற்கான நிதி உதவி ரூ.2,500/- பெற இறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் சீக்கிரமாகவும், எளிதாகவும் இத்தொகை பெறலாம்.

5. முந்தைய திட்டத்தில் வழங்கப்பட்ட திருமண உதவித் தொகை ஆணுக்கு ரூ.3000/-, பெண்ணுக்கு ரூ.5,000/- என்றிருந்ததை உயர்த்தி, முறையே ரூ.8,000/- மற்றும் ரூ. 10,000/- வழங்கப்படுகிறது. அதேபோல், முதியோர் உதவித் தொகையும் ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

6. கவின்கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் ஆகிய படிப்புகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், கல்விக்கான உதவித் தொகை பிற திட்டங்களிலிருந்து பெறப்பட்டாலும், இத்திட்டத்தின்கீழும் பயன் பெறலாம்.

7. உள்ளூர் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

எனவே, மேற்சொன்னவாறு விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2012 மே 11]

12—

குடிநீர் வசதி

வினா எண் 574—திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சியில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 22,222 ஆகும். தற்போது, நாமகிரிப்பேட்டை பேரூராட்சிக்கு வாரிய பராமரிப்பில் உள்ள பட்டணம் சீராப்பள்ளி (நிலை 2) கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து, காவிரி குடிநீர், நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு, 70 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான ஆற்றுக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய குடிநீர் வசதி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

ஆழ்குழாய்க் கிணறுகள்

வினா எண் 5627—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரம்பிக்குளம்—ஆழியாறு பாசன பிரதான வாய்க்கால் அருகில் நகராட்சி, பேரூராட்சி, சிற்றூராட்சி பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 மே 11

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன பிரதான கால்வாய் என்பது திருமூர்த்தி அணையில் இருந்து ஆரம்பித்து 1) தளி பேரூராட்சி அருகில் 2) உடுமலை ஒன்றியத்தைச் சார்ந்த கிராமங்கள் வழியாகவும் 3) பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம் 4) பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், 5) நெகமம் பேரூராட்சி அருகில், 6) சுல்தான்பேட்டை ஒன்றியம், 7) பல்லடம் ஒன்றியம் 8) பல்லடம் பேரூராட்சி அருகில், 9) பொங்கலூர் ஒன்றியம், 10) காங்கேயம் ஒன்றியம் 11) வெள்ளக்கோவில் ஒன்றியங்களிலுள்ள குக்கிராமங்கள் வழியாகச் செல்கிறது. மேலும், இதன் அருகில் உள்ள குக்கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு ஆற்றுநீரை ஆதாரமாக கொண்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும் மற்றும் செயல்படுத்தப்படவும் உள்ளது. மேலும், தற்பொழுது அந்தந்த குடிநீர் திட்டத்தின்கீழ் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பரம்பிக்குளம்-ஆழியாறு பிரதான வாய்க்கால் அருகில் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

14—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8448—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு கிராமம், நரிமேடு மாட்டையாம்பட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 மே 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியத்திலுள்ள தெசவிளக்கு ஊராட்சியைச் சார்ந்த நரிமேடு மாட்டையாம்பட்டி பகுதி, சேவாத்தாகாடு குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இப்பகுதியில் சுமார் 50 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதிக்கு, பிரதான குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனி மின்விசைத் திட்டம்மூலம் நாளொன்றுக்கு நபரொருவருக்கு 40 லிட்டர்வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. நரிமேடு பகுதியில் தனியாக ஒரு கைப்பம்பும் உள்ளது. இப்பகுதிக்குப் போதுமான குடிநீர் தற்பொழுது வழங்கப்பட்டு வருவதால், வாரிய விதிப்படி, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து காவிரிக் குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

15—

உப பொருட்கள்

வினா எண் 11423—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு சேமிப்பு பணிகலன், குளிர்சாதனப் பெட்டி மற்றும் தொடர்புடைய உப பொருட்கள் வழங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் உயர் கல்வித் துறை அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு சேமிப்பு பணிகலன், குளிர்சாதனப் பெட்டி மற்றும் தொடர்புடைய உபபொருட்கள் வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 230, உயர் கல்வி,

நாள் 24-10-11-ல் ரூ.23.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து உபகரணங்களையும் அரசுத் துறை நிறுவனமான எல்காட் நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு, அந்நிறுவனத்திற்கு 1-2-2012 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

16—

பணியின் நிலை

வினா எண் 11424—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் இந்திய அரசிதழ் மற்றும் புனித ஜார்ஜ்கோட்டை அரசிதழ்கள் ஆகியவற்றை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் நுண்படச் சுருள்கள் மேற்கொள்ளும் பணியின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் உயர் கல்வித் துறை அமைச்சர்:

புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் இந்திய அரசின் அரசிதழ்களை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் மைக்ரோ பிலிமிங் செய்திட, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 228, உயர் கல்வி, நாள் 24-10-11ல் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள எல்காட் நிறுவனத்திற்கு பணி ஆணை 6-2-2012ல் வழங்கப்பட்டுள்ளது.

17—

மின்னணு பத்திரப் பதிவு

வினா எண் 3759—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு பத்திரப் பதிவு முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?